## (ஓ) வெளிநாட்டு வர்த்தகம்

### 1. முக்கிய அபிவிருத்திகள்

சுங்கப்பதிவுகளின்படி 1972ஆம் ஆண்டிற்குரிய மொத்த ஏற்றுமதிகளின் பெறுமதி ரூ. 19,420 இலட்சமாகவும், இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 20,450 இலட்சமாகவும் விளங்கிற்று. இது, 1971 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வணிகவர்த்தகக் குறைநிலையாகிய ரூ. 390 இலட்சத்துக்கு எதிராக ரூ. 1030 இலட்சம் கொண்ட குறைநிலையை ஏற்படுத்தியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளின் பெறுமதி ரூ. 50 இலட்சத்தால் குறைந்து காணப்பட்டவிடத்து இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 590 இலட்சம் அதிகமாகக் காணப்பட்டது. கீழேயுள்ள அட்டவணை II (ஓ) 1 இலங்கையினது கடந்த ஐந்து ஆண்டுகட்குரிய வெளிநாட்டு வர்த்தகத்தரவுகளை ஒப்பீட்டு அடிப்படையில் தருகின்றது.

**அட்டவணை II (ஓ) 1**

**வெளிநாட்டு வர்த்தகம்—1968-1972**

| ஆண்டு | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | குறிகாட்டியின் எண்கள் (1967=100) | | | | வர்த்தக மாற்று வீதங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அளவு | | விலை | | |
| | *ஏற்றுமதிகள் (க.ஏ.பெ.) | இறக்குமதிகள் (கோ.க.கா) | வர்த்தக நிலுவை | முழு ஏற்றுமதிகளும் | முழு இறக்குமதிகளும் | முழு ஏற்றுமதிகளும் | முழு இறக்குமதிகளும் | |
| 1968 | 2,035 | 2,173 | – 138 | 103 | 101 | 117 | 126 | 93 |
| 1969 | 1,916 | 2,543 | – 627 | 98 | 108 | 117 | 134 | 88 |
| 1970 | 2,033 | 2,313 | – 280 | 102 | 102 | 118 | 140 | 84 |
| 1971 | 1,947 | 1,986 | – 39 | 99 | 90 | 117 | 150 | 78 |
| 1972 | 1,942 | 2,045 | – 103 | 97 | 88 | 118 | 157 | 75 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கப்புள்ளி விவரங்கள்,
இலங்கை மத்திய வங்கி.

* மீள ஏற்றுமதி செய்யப்பட்டவையும் அடங்கும்.

எனினும், சுங்கப்பகுதியினரால் கொடுக்கப்பட்ட தரவுகளிலிருந்து பெறப்பட்ட மேலேயுள்ள எண்தொகைகள், சில குறைபாடுகளைக் கொண்டவையாக இருக்கின்றன. வர்த்தகத்தரவுகள் சுங்கப்பகுதியினரின் ஏற்றுமதி, இறக்குமதிப் பதிவுகளினைக்கொண்டே திரட்டப்பட்டன. தேயிலை ஏற்றுமதியைப்பொறுத்தவரையில், கப்பல் பிரயாணத்தை மேற்கொண்ட திகதி ஏற்றுமதி செய்யப்பட்ட திகதியாகக் கருதப்படுகின்றது. ஏனைய ஏற்றுமதிகள் அல்லது இறக்குமதிகளைப் பொறுத்தவரையில் தீர்வை செலுத்தப்பட்ட திகதி அல்லது தீர்வைக்குட்படாத பொருட்களாயின், அந்தப்பதிவுத் திகதி ஏற்றுமதி செய்யப்பட்ட திகதியாகக் கருதப்பட்டது. இவ்வாறுக பதிவு செய்யப்பட்ட ஓர் ஏற்றுமதித் திகதிக்கும் உண்மையாக ஏற்றுமதி நடைபெற்ற திகதிக்கும் எதுவித சம்பந்தமும் இல்லையெனலாம். இதற்குரிய காரணம் பெரும் ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி செய்த உண்மையான திகதிக்குப் பின்னர் தீர்வைகளைச்

செலுத்தவும், ஏற்றுமதிப் பதிவுகளைக்கொடுக்கவும் கூடிய வசதிகளைப் பெற்றிருப்பதேயாகும். பல சந்தர்ப்பங்களில் இந்த இரண்டு நடவடிக்கைகளிற்கும் இடையே குறிப்பிடத்தக்க அளவு கால இடைவெளி காணப்பட்டது. இறக்குமதிகளைப் பொறுத்தவரையிலும் நிலைமை பெருமளவுக்கு இவ்வாறே காணப்பட்டது. இதைத்தவிர பொதி அஞ்சல் (முக்கியமாகப் புத்தகங்கள்) மூலம் வரும் தீர்வைக்குட்படாத சில இறக்குமதிப்பொருட்கள் இறக்குமதிப்பதிவுக்குட்படுத்தப்படுவதில்லை. கப்பல் எரிபொருளினைப் பொறுத்தவரை சுங்கப்பகுதியினுல் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நடைமுறையினுல், மீள ஏற்றுமதிகளின் அளவு, பெறுமதி என்பவை குறைவாகவே பதிவுசெய்யப்பட்டன.

மேற்கூறப்பட்ட காரணங்கட்காக அட்டவணை II (ஓ) 1 இல் உள்ள சுங்கத் தரவுகள், அட்டவணை II (ஓ) 2இல் திருத்தப்பட்டுள்ளன. இதற்கு, உணவு ஆணையாளரின் உண்மை இறக்குமதிகள் (பெருமளவுக்கு இலங்கையின் மிக முக்கியமான இறக்குமதியாளர்) பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் இறக்குமதி, பயணத்தர் பொதி இறக்குமதிகள், மோட்டார் வாகனங்களின் 'வியாபார நோக்கமில்லாத' இறக்குமதிகளும் மீள இறக்குமதிகளும் (இறக்குமதிகளில் வெளிநாட்டுச் செலாவணி சம்பந்தப்படாத), நம்பிக்கையான புள்ளிவிபரங்கள் மேலும் கிடைக்கக்கூடிய ஏனைய இறக்குமதி விடயங்கள் என்பவை உதவியாக இருந்தன. இதேபோல இரத்தினக்கற்கள், கப்பல் எரிபொருள், என்பவை சம்பந்தமான ஏற்றுமதித்தரவுகளும், வருவாய்களும் இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தாலும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தாலும் கொடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின் உதவியுடன் சீராக்கம் செய்யப்பட்டன.

சீராக்கப்பட்ட வர்த்தக எண்தொகைகள் 1971 ஆம் ஆண்டின் ரூ. 610 இலட்சம்கொண்ட குறைக்கு எதிராக 1972 ஆம் ஆண்டில் ரூ. 1,830 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டுகின்றன; சீராக்கப்படாத வர்த்தக எண்தொகைகளும் இதே போக்கினைக்காட்டின. 1971 ஆம் ஆண்டினைவிட 1972ஆம் ஆண்டில் இறக்குமதிகளின் அளவு மேலும் இறககுமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக குறைவுற்றபோதும், வர்த்தக நிலுவை மோசமான நிலையினையடைவதை தவிர்க்குமளவுக்குப் போதியதாக இருக்கவில்லை.

இரு தரவுகளின்படியும் (சீராக்கப்பட்டதும் சீராக்கப்படாததும்) 1972 ஆம் ஆண்டுக்குரிய ஏற்றுமதி வருவாய்கள் அதற்கு முன்னைய இரு ஆண்டுகளுக்குமான தரவுகளுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியுற்றுக்காணப்பட்டது. 1971 ம் ஆண்டில் இருந்தது போலவே ஏற்றுமதி வருவாய்களில் வீழ்ச்சி ஏற்படுவதற்குரிய காரணம், ஏற்றுமதி செய்யப்பட்ட அளவில் ஏற்பட்ட சுருக்கமேயாகும். (அட்டவணை II (ஓ) 1)

## அட்டவணை II (ஓ) 2
### வர்த்தகத் தரவுகளுக்கான சீராக்கங்கள்

(எண்தொகைகள் பத்து இலட்சம் ரூபாயகளில்)

| | 1971 | | 1972 | |
|---|---|---|---|---|
| | இறக்குமதிகள் | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | ஏற்றுமதிகள் |
| 1. அரிசி, கோதுமை மா, சீனி என்பனவற்றின் பெறுகைகள் தொடர்பான சுங்கத் தரவுகளுக்கும், உணவு ஆணையாளரின் தரவுகளுக்குமிடையிலுள்ள வேறுபாடு ... | — 2.0 | — | 13.0 | — |
| 2. சுத்திகரிக்கப்படாத எண்ணெயின் இறக்குமதிகள் தொடர்பான சுங்கத் தரவுகளுக்கும், பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் தரவுகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு ... | 138.0 | — | 149.0 | — |
| 3. மோட்டார் வாகனங்களினதும், தனியார் பொதிகளினதும் இறக்குமதிகளின் வர்த்தக நோக்கற்ற இறக்குமதிகளுக்கான கழிவு ... | — 25.6 | — | — 12.0 | — |
| 4. இறக்குமதிகள் மீதான ஏனைய பிழைகளும் தவறுகளும் ... | 3.4 | — | 4.0 | — |
| 5. கப்பல் எரி பொருளிடல் தொடர்பானசுங்கத் தரவுகளுக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தரவுகளுக்கும் இடையிலான வேறுபாடு .. | — | 80.3 | — | 67.8 |
| 6. எரிபொருள் ஏற்றுமதிகள் தொடர்பான சுங்கத்தரவுகளுக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தரவுகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு .. | — | 11.7 | — | 2.5 |
| 7. இரத்தினக் கல் ஏற்றுமதிகள் தொடர்பான சுங்கத் தரவுகளுக்கும் இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் தரவுகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு ... | — | — | — | 3.4 |
| 8. மொத்தம் மேலேயுள்ள 1—7 வரை ... | 113.8 | 92.0 | 154.0 | 73.7 |
| 9. மேலேயுள்ள அட்டவணை II (ஓ) 1 இலிருந்தும், 8 இலிருந்தும் பெறப்பட்டபடி, சீராக்கப்பட்ட வர்த்தகத் தரவுகள் ... | — 21.8 | | — 80.3 | |

மூலம்: சுங்கப்பகுதி, இலங்கை; உணவு ஆணையாளர்; பெற்றோலியக் கூட்டுத்தாபனம்; அரச இரத்தினக் கல் கூட்டுத்தாபனம்; இறக்குமதி, செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.

1972ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி விலைகள் அதிகரித்தன. இதற்கு தேயிலையினது[1] க. ஏ. பெ. விலையில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். இருந்தபோதும், இலங்கையின் ஏற்றுமதி வருவாய்கள் 1972 ஆம் ஆண்டில் உள்நாட்டு நாணயமதிப்பளவில் வீழ்ச்சியடைந்

1. பின்னால் பார்க்கவும்.

ததோடு மட்டுமன்றி, அதன் வெளிநாட்டு ஏற்றுமதிகளினது பெறுமதி உலகத்தின் பிரதான மாற்றக்கூடிய நாணயங்களில் அளவிட்டுக் கூறும்போது இவ் வீழ்ச்சி அதைவிடக்கூடுதலாக இருந்தது. இந்த ஆண்டுக்காலத்தின்போது செய்யப்பட்ட நாணய மீள இணைப்பே இந்நிலைக்குக் காரணமாகும். இறக்குமதிகளினைப் பொறுத்தவரையில், இறக்குமதி அளவு, அதிகரித்த வர்த்தக கட்டுப்பாடுகளினுல் குறைவுற்ற போதும், இறக்குமதிச் செலவின் மட்டம் அதிகரித்ததன் விளைவாக விலைகளில் மேலும் உயர்வு ஏற்பட்டது.

இலங்கையினது வர்த்தக மாற்றுவீதம் முன்னைய ஐந்து ஆண்டுகளைப் போலவே தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தபோதும், முக்கியமாக தேயிலையினது க. ஏ. பெ. விலையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக இவ்வீழ்ச்சி சிறிதளவாகவே காணப்பட்டது.

## 2. ஏற்றுமதிகள்

கீழேயுள்ள அட்டவணை II (ஓ) 3 சீராக்கப்படாத சுங்கத்தரவுகளின் அடிப்படையில் கடந்த ஐந்து ஆண்டுக்குரிய பிரதான ஏற்றுமதி உற்பத்திகளினது ஏற்றுமதி வருவாய் விபரங்களைத் தருகிறது.

**அட்டவணை II (ஓ) 3**
**ஏற்றுமதிகளின் அமைப்பு — 1968–72**

| பண்டம் | பெறுமதி ப. இ. ரூபாய்களில் | | | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 |
| தேயிலை ... | 1,162 | 1,062 | 1,120 | 1,145 | 1,154 | 57 | 55 | 55 | 59 | 60 |
| றப்பர் ... | 331 | 431 | 440 | 307 | 265 | 16 | 22 | 22 | 16 | 14 |
| தெங்கு உற்பத்திகள் ... | 334 | 225 | 240 | 280 | 266 | 16 | 12 | 12 | 14 | 14 |
| அவற்றின் பிரிவுகள் | | | | | | | | | | |
| (அ) கொப்பரா ... | 34 | 26 | 23 | 24 | 52 | 2 | 1 | 1 | 1 | 3 |
| (ஆ) தேங்காயெண்ணெய் | 133 | 108 | 116 | 149 | 132 | 7 | 6 | 6 | 8 | 7 |
| (இ) தேங்காய்த் துருவல் | 164 | 87 | 98 | 103 | 78 | 8 | 5 | 5 | 5 | 4 |
| (ஈ) தேங்காய்கள் | 3 | 4 | 3 | 4 | 4 | ... | ... | ... | ... | ... |
| ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகள் ... | 149 | 157 | 195 | 198 | 238 | 7 | 8 | 10 | 10 | 12 |
| மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகள் ... | 1,976 | 1,875 | 1,995 | 1,930 | 1,923 | 97 | 98 | 98 | 99 | 99 |
| மீளஏற்றுமதி செய்யப்பட்டவை | 60 | 41 | 38 | 17 | 18 | 3 | 2 | 2 | 1 | 1 |
| **கூட்டு மொத்தம்** ... | **2,035** | **1,916** | **2,033** | **1,947** | **1,942** | **100** | **100** | **100** | **100** | **100** |

மூலம்: சுங்கப் பகுதி, இலங்கை.

1972 ஆம் ஆண்டினது ஏற்றும்தி விபரங்களும், அது சம்பந்தமான ஏனைய விடயங்களும் பின்னுல் ஆராயப்பட்டுள்ளன.

### தேயிலை உற்பத்தி

தேயிலை உற்பத்தி 1972ஆம் ஆண்டில் 4,710 இலட்சம் இருத்தல்களாக அமைந்து. 1971ஆம் ஆண்டினைவிட 90 இலட்சம் இருத்தல்கள் குறைவாகவும், உச்ச உற்பத்தி ஆண்டாகிய 1965 இனை விட 320 இலட்சம் இருத்தல்கள்

குறைவானதாகவும் விளங்கியது. மேலும் ஓரளவுக்கு விலைகளின் போக்கினலும் உற்பத்தி, தாழ்ந்த பிரதேச தேயிலையைப் பொறுத்தவரை குறைந்த அளவும் உயர்ந்த பிரதேச தேயிலையைப் பொறுத்தவரை கூடிய அளவும் சுருக்க மடைந்தது.

1972ஆம் ஆண்டின் உற்பத்தி அளவில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு, பெப்புருவரி மாச்சு மாதங்களில் ஏற்பட்ட கடுமையான வரட்சி பெரும்ளவு காரண மாக இருந்தது. 1971ஆம் ஆண்டின் இதேகாலப் பகுதியைவிட இந்த ஆண்டின் இருமாதகால உற்பத்தி 190இலட்சம் இருத்தல்களால் வீழ்ச்சியுற்று, அத்தோடு தேயிலைப் பெருந்தோட்ட கைத்தொழிலினல் நுகர்ச்சி செய்யப்பட்ட வளமாக்கி யின் அளவு 1970ம்ஆம் ஆண்டின் 116.4 ஆயிரம் தொன்கள், 1971ஆம் ஆண்டின் 118.8 ஆயிரம் தொன்கள் என்பவற்றிலிருந்து 1972ஆம் ஆண்டில் 99.3 ஆயிரம் தொன்களாக வீழ்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மீளநடுகைக்கான உதவிப்பணம், வரிச்சலுகை என்பவை உயர் பயன் தரக்கூடிய புதிய பயிர்வகைகளை மீளப்பயிரிடும் செலவை பேணுவதற்கும் போதியதாக இருக்கவில்லை. இவ்வாருக ஆண்டுதோறும் பதிவு செய்யப்பட்டு வந்த மீளப்பயிரிடப்பட்ட நிலப்பரப்பு, 1970இன் 6,857 ஏக்கரிலிருந்து 1971இல் 6,640 ஏக்கராகவும் 1972ஆம் ஆண்டில் இத்தொகை 6,418 ஏக்கராகவும் வீழ்ச்சியடைந்தது. இது, ஐந்தாண்டுத்திட்டத்தின்படி எதிர்பார்க்கப்பட்ட ஆண்டு ஒன்றுக்கு 7,500 ஏக்கர்கள் மீளப் பயிரிடப்படவேண்டுமென்ற இலக் குக்கு ஏற்றுமதிகள் மாருனதாகும்.

**அட்டவணை II (ஒ) 4**

**தேயிலை உற்பத்தி — உயர அடிப்படையில்**

| | 1971 | | 1972 | | 1971 ஐ விட 1972 இல் முழுமையான மாற்றங்கள் |
|---|---|---|---|---|---|
| | அளவு ப.இ.இரு | % | அளவு ப.இ.இரு. | % | |
| உயர்ந்த பிரதேசம் ... ... | 186.4 | 38.8 | 179.4 | 38.1 | — 7.0 |
| நடுத்தரப் பிரதேசம் ... ... | 167.5 | 34.0 | 165.2 | 35.1 | — 2.3 |
| தாழ்ந்த பிரதேசம் ... ... | 126.2 | 26.3 | 126.0 | 26.8 | — 0.2 |
| மொத்தம் | 480.1 | 100.0 | 470.6 | 100.0 | — 9.5 |

மூலம்: தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

1972ஆம் ஆண்டில் தேயிலை மூலம் பெறப்பட்ட ஏற்றுமதி வருவாய் ரூ. 11,540 இலட்சமாகும். இது 1971ஆம் ஆண்டினதைவிட ரூ. 90 இலட்சம் அல்லது 0.8 சதவீதம் அதிகமானதாகும். முன்னைய ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவோடு ஒப்பிடும்போது, 270 இலட்சம் இருத்தல்கள்

(அல்லது 6.1 சதவீதம்) வீழ்ச்சியுற்றபோதும், மேற்குறிப்பிடப்பட்ட அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. இது முற்றாக தேயிலையின் க. ஏ. பெ. அலகு விலை 1971ம் ஆண்டின் சராசரி விலையைவிட இருத்தலுக்கு 21 சதங்கள்கொண்ட (அல்லது 8.2 சதவீதம்) அதிகரிப்பு ஏற்பட்டதன் விளைவேயாகும்.

அட்டவணை II (ஓ) 5 உற்பத்தி ஏற்றுமதி அளவு, கொழும்பு ஏலங்கள் இலண்டன் ஏலங்கள், 'தனியார்' விற்பனைகள் ஆகியவை மூலம் விற்பனைசெய்யப்பட்ட தேயிலைத்தரவுகள் யாவற்றையும் தருகின்றது. தேயிலை உற்பத்தியளவு 1972ஆம் ஆண்டில் 90 இலட்சம் இருத்தல்களால் 1971ம் ஆண்டினைவிட வீழ்ச்சியடைந்த போதும், கொழும்பு ஏலங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்ட அளவு 20 இலட்சம் இருத்தல்களால் மட்டுமே வீழ்ச்சியுற்றது இதேவேளையில் தனியார் விற்பனைகள் 10 இலட்சம் இருத்தல்களால் வீழ்ச்சியுற்றன. மறுபக்கத்தில் 1968ஆம் ஆண்டில் இலண்டன் ஏலங்களுக்கு ஏற்றுமதிசெய்த 1,110 இலட்சம் இருத்தல்களோடு ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 540 இலட்சம் இருத்தல்கள் மட்டுமே ஏற்றுமதிசெய்யப்பட்டன. கொழும்புச் சந்தை விலைகளில் காணப்பட்ட கவர்ச்சியினைத் தொடர்புபடுத்தியே இதற்குரிய காரணத்தினை விளக்கலாம்.

### அட்டவணை II (ஓ) 5

**உற்பத்தியும், ஏற்றுமதிகளும், கொழும்பு ஏலத்தில் விற்கப்பட்ட அளவுகளும், இலண்டன் ஏலங்களுக்குக் கப்பலிடப்பட்ட அளவுகளும்**

| ஆண்டு | உற்பத்தி | ஏற்றுமதிகளின் சுங்கத் தரவுகள்1 | கொழும்பு ஏலகங்களில் விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட அளவு | இலண்டன் ஏலங்களுக்கு நேரடியாகக் கப்பலிலிடப்பட்ட அளவு | தனிப்பட்ட விற்பனைகள் |
|---|---|---|---|---|---|
| 1967 | 487 | 478 | 369 | 110 | 5 |
| 1968 | 496 | 460 | 369 | 111 | 5 |
| 1969 | 484 | 445* | 387 | 88 | 5 |
| 1970 | 468 | 460* | 373 | 91 | 4 |
| 1971 | 480 | 443* | 393 | 73 | 5 |
| 1972 | 471 | 416* | 391 | 54 | 4 |

1. சுங்கப் பதிவுகளிலிருந்து பெறப்பட்ட எண்தொகைகளின் அடிப்படையில்
* உடனடித் தேயிலையையும் உள்ளடக்கியுள்ளது.

மூலம்: தேயிலைக் கட்டுப்பாட்டாளர் நிருவாக அறிக்கைகள்,
இலங்கைச் சுங்கப் புள்ளி விபரங்கள்,
கொழும்புத் தரகர் சங்கம்.

**சேரிடங்களின்படியான ஏற்றுமதிகள்**

1971ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கையின் குறிப்பிடப்பட்ட போக்கினைத் தொடர்ந்து, இந்த ஆண்டிலும், இலங்கைத் தேயிலையின் சந்தையாக ஐக்கிய இராச்சியம் வகித்துவந்த முக்கியத்துவம் மேலும் குறைந்தது. 1970ஆம்

ஆண்டிலும் 1971ஆம் ஆண்டிலும் ஐக்கிய இராச்சியத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி முறையே 1,031 இலட்சம், 1,561 இலட்சம் இருத்தல்களாகவிருந்து, 1972ஆம் ஆண்டில் 743 இலட்சம் இருத்தல்களாக விளங்கியது. கொழும்பு ஏலங்களின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டு ஐக்கிய இராச்சியத்திற்கு ஏற்றும்தி செய்யப்பட்ட தேயிலையின் அளவுகள் 1970ஆம் ஆண்டின் 650 இலட்சம் இருத்தல்களிலிருந்து 1971 இல் 300 இலட்சம் இருத்தல்களாகவும் (53.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சி) 1972ஆம் ஆண்டில் 200 இலட்சம் இருத்தல்களாயும் (33.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சி) வீழ்ச்சியடைந்தது. இலண்டன் ஏலங்களுக்குக் கப்பலேற்றப்பட்ட தேயிலையின் அளவுகள் 1970ஆம் ஆண்டின் 910 இலட்ச இருத்தல்களில் இருந்து 1971இல் 730 இலட்ச இருத்தல்களாகவும் (19.8 சதவீத வீழ்ச்சி) 1972இல் 540 இலட்ச இருத்தல்களாகவும் (முன்னைய ஆண்டின் எண்தொகைகளைவிட 26.0 சதவீத வீழ்ச்சி) வீழ்ச்சியடைந்தது. இந்தப் போக்குக்கு பெரும்பாலும் இரு காரணங்கள் இருந்தன. ஐக்கிய இராச்சியத்தினுல் இறக்குமதி செய்யப்பட்ட மொத்த தேயிலை இறக்குமதிகள், நுகர்ச்சி முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களினுல் 1970ஆம் ஆண்டின் 252.7 ஆயிரம் மெற்றிக் தொன்களில் இருந்து 1971-72ஆம் ஆண்டுகளில் முறையே 226.3, 212.2 ஆயிரம் மெற்றிக் தொன்களாக வீழ்ச்சியடைந்தது. இலண்டன் ஏலங்களில் தேயிலையின் சராசரி விற்பனை விலையும் 1970 ஆம் ஆண்டின் ஒரு கிலோகிரும் 45.67 புதிய பென்னிகளாகக் காணப்பட்டு 1971இல் 43.25 புதிய பென்னிகளாகவும், 1972இல் கிலோகிரும் 42.24 புதுப்பென்னிகளாகவும் வீழ்ச்சியடைந்தது. எனினும் கடந்த சில ஆண்டுக்காலத்தில், இலங்கையினதும், இந்தியாவினதும், ஐக்கிய இராச்சியத்துக்கான தேயிலை ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு வீழ்ச்சியடைகின்றன[1]. ஆபிரிக்க நாடுகளில் இருந்து ஏற்றுமதிசெய்யப்பட்ட தேயிலையின் அளவு, 1971 ஆண்டில் 61.4 ஆயிரம் மெற்றிக் தொன்களாக இருந்து 1972இல் 73.4 ஆயிரம் மெற்றிக் தொன்களாக விளங்கியது. ஆபிரிக்க உற்பத்தியாளர்கள், விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டபோதும் (கீழேயுள்ள அட்டவணை II (ஒ) 8 பார்க்கவும்) குறைந்த உற்பத்திச் செலவுகளின் காரணமாக நிரம்பலை அதிகரிக்கக்கூடியதாகவிருந்தது. ஆபிரிக்கத் தேயிலையின் ஏற்றுமதி அதிகரிப்புக்குக் காரணமாக இருந்த வேறு சில காரணிகள் ஐக்கிய இராச்சியத்தில் ஆபிரிக்காவினது பைகளில் அடைக்கப்பட்ட தேயிலைப் பாவிப்பு பெருமளவில் அதிகரித்தமையும், ஆபிரிக்க உற்பத்தியாளர்களிடையேயும், ஐக்கிய இராச்சியத்தின் பெரிய தேயிலை பங்கீட்டாளர்களிடையேயும் இருந்த நெருங்கிய வர்த்தக நிதித் தொடர்புகளுமாகும் எனினும், பாக்கித்தானிய கொள்வனவாளர்களின் அதிகரித்த கேள்வியினுல் 1972ஆம் ஆண்டில் இலங்கைத் தேயிலைக் கைத்தொழிலுக்கு ஒரு வாய்ப்பான சூழ்நிலை ஏற்பட்டது. பாக்கித்தான் 1970இல் 7 இலட்சம் இறுத்தல்களையும் 1971இல் 282 இலட்சம் இருத்தல்களையும் கொள்வனவு செய்து 1972இல் 499 இலட்சம் இருத்தல்களாக படிப்படியாக உயர்த்தியமை ஓரளவு சாதகமான சூழ்நிலை ஏற்படக்கூடியதாக இருந்தது. இவ்வாருக பாக்கித்தான் 1972ஆம் ஆண்டில் எங்களது இரண்டாவது முக்கிய கொள்வனவாளரா

1. இலண்டன் தேயிலைத் தரகர் சங்கம்.

கியது. ஏனைய தெரிவு செய்யப்பட்ட முக்கியமாக ஏற்றுமதிச் சந்தைகளைப் பொறுத்தவரையில் அட்டவணை II (ஒ) 6) லிபியா, ஐரோப்பிய பொருளாதார சமூகம், ஐக்கிய அராபியக் குடியரசுகளினது ஏற்றுமதிகள் அதிகரித்தவிடத்து ஐக்கிய அமெரிக்க நாடுகள் (1972ஆம் ஆண்டின் மூன்றாவது பெரும் கொள் வனவாளர்) ஈராக்கு, அவுஸ்திரேலியா என்பவற்றின் ஏற்றுமதிகள் வீழ்ச்சி யடைந்தன.

அட்டவணை (ஒ) 6

நாடுகளின்படியான தேயிலை ஏற்றுமதிகளின் அளவும் அவற்றின் சதவீதப்பங்குகளும்

| | தேயிலை ஏற்றுமதிகளின் அளவுகள் (ப. இ. ரு.) | | மொத்த அளவின் சதவீதமாக | |
|---|---|---|---|---|
| | 1971 | 1972 | 1971 | 1972 |
| ஐக்கிய இராச்சியம் ... | 103.1 | 74.3 | 23.3 | 17.8 |
| ஐ. நா. நாடுகள் ... | 44.5 | 37.3 | 10.0 | 8.9 |
| ஈராக்கு ... | 41.3 | 31.7 | 9.3 | 7.6 |
| அவுத்திரேலியா ... | 32.5 | 22.3 | 7.4 | 5.4 |
| பாக்கித்தான் ... | 28.2 | 49.9 | 6.4 | 12.0 |
| தென்னாபிரிக்க் கூட்டரசு ... | 23.9 | 22.3 | 5.4 | 5.4 |
| ஐக்கிய அரபுக் குடியரசு ... | 21.4 | 22.8 | 4.8 | 5.5 |
| லிபியா ... | 19.9 | 27.2 | 4.5 | 6.5 |
| ஐக்கிய சோவியத்து சோசலிசக் குடியரசு ... | 4.4 | ... | 1.0 | ... |
| ஐ. பொ. ச. ... | 10.7 | 11.1 | 2.4 | 2.7 |
| ஏனைய நாடுகள் ... | 113.1 | 117.3 | 30.0 | 34.7 |
| கூட்டு மொத்தம் ... | 443.0 | 416.2 | 100.0 | 100.0 |

மூலம்: இலங்கை சுங்கப் பகுதி

**கொழும்பு ஏலங்கள்**

கொழும்பு ஏலங்களில் விற்பனைக்கு விடப்பட்ட அளவு, பயிர் விளைவில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தவிர பெருமளவுக்கு மாற்றமின்றியே அமைந் திருந்தது. ஆனால் ஓரளவுக்கு ஐக்கிய இராச்சியம் எமது சந்தை என்ற நிலையி லிருந்து முக்கியத்துவம் இழந்து செல்லும் தன்மையைப் பிரதிபலிக்கின்றது. கொழும்புத் தேயிலை ஏலங்களில் தேறிய விற்பனைச் சராசரி விலை[1] 1971 ஆம் ஆண்டினதைவிட இருத்தலுக்கு 8 சதவீதங்களால் உயர்ந்தது. (அட்டவணை II (ஒ) 7)

1. அதாவது மொத்த விலைக்கும் இருத்தல் ஒன்று விலை ரூ. 1.85 க்கு மேல் (இது வரவு செலவுத்திட்டத் தில் இருத்தலுக்கு ரூ. 2.00 எனத்திருத்தப்பட்டது.) பெறுமதியுடைய தேயிலையில் அரசாங்கத்துக்குக் கொடுபடவேண்டிய ரூ. 1.85 க்கும் இடையில் உள்ள வேறுபாட்டில் 50 சதவீத வரியை மொத்த விலை யிலிருந்து கழித்த தொகையே இத்தொகையாகும்.

1971 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 1972 இல் நிலங்களின் உயர அடிப் படையில் எல்லாவகைத் தேயிலைகளினதும் தேறிய சராசரி விற்பனை விலைகளும் அதிகரித்தன. தாழ்ந்த பிரதேச தேயிலை பெருமளவில் மிகக்கூடிய விலையைப் பதிவுசெய்தவிடத்து தொடர்ந்து மத்திய பிரதேசத் தேயிலை 1971 ஆம் ஆண்டினைவிட தேறிய சராசரி விற்பனை விலையில் 8 சதவீத அதிகரிப்பினை அடைந்ததோடு இரண்டாவதாக விளங்கியது. உயர் பிரதேச தேயிலையின் விலையில் 1971 ஆம் ஆண்டின் தேறிய சராசரி விற்பனை விலையினைவிட இருத் தலுக்கு 5 சதம் கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டது.

மேலேயுள்ள விலைப்போக்குகளிற்கான பிரதான விளக்கத்தினை முக்கிய இலங்கைத் தேயிலைக் கொள்வனவாளர்களின் சார்பு முக்கியத்துவ மாற்றங்க ளில் காணலாம். பெப்புருவரி, மாச்சு மாதங்களில் நிரம்பலில் ஏற்பட்ட வீழ்ச்சி, குறிப்பாக பாகித்தானிடமிருந்து ஏற்பட்ட அதிகரித்த கேள்வி, தொடர் பாக முதலாம் இரண்டாம் காலாண்டுப் பகுதிகளில் ஓரளவுக்கு விலைகளில் செல்வாக்கினைச் செலுத்தியதாகத் தெரிகிறது. இதே வேளையில் 1972 ஆம் ஆண்டில் இரண்டாம் காற்பகுதியில் பெறப்பட்ட உயர்ந்த விலைகளுக்கு ஸ்டேர்லிங் பவுண்டுடன் ரூபா மீண்டும் இணைக்கப்பட்டமையும் ஓரளவுக்குக் காரணமாக அமைந்தது

### அட்டவணை II (ஓ) 7

### தேயிலை உற்பத்திகளும் ஏற்றுமதிகளும் விலைகளும் 1968—1972

| ஆண்டு | | உற்பத்தி ப.இ.இரு. | ஏற்றுமதிகள் | | கொழும்பு ஏலவிற்பனையின் தேறியசராசரி இருத்தலொன்றுக்கு ரூபாய் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அளவு ப.இ.இரு. | க.எ.பெ. விலை இரு.ரூ. | உயர்ந்த பிரதேசம் | நடுத்தர பிரதேசம் | தாழ்ந்த பிரதேசம் | எல்லாத் தேயிலைகளும் |
| 1968 | ... | 496 | 460 | 2.52 | 1.93 | 1.67 | 1.63 | 1.75 |
| 1969 | ... | 484 | 445 | 2.39 | 1.80 | 1.40 | 1.38 | 1.53 |
| 1970 | ... | 468 | 460 | 2.44 | 1.92 | 1.58 | 1.38 | 1.63 |
| 1971 | ... | 480 | 443* | 2.50 | 1.94 | 1.72 | 1.76 | 1.81 |
| 1972 | ... | 471 | 416 | 2.77 | 1.99 | 1.80 | 1.89 | 1.89 |
| 1971 | 1-ம் காலாண்டு ... | 113 | 102 | 2.29 | 2.35 | 1.72 | 1.59 | 1.80 |
| | 2-ம் காலாண்டு ... | 139 | 119 | 2.51 | 1.84 | 1.66 | 1.73 | 1.75 |
| | 3 ம் காலாண்டு ... | 105 | 119 | 2.56 | 1.99 | 1.75 | 1.80 | 1.85 |
| | 4-ம் காலாண்டு ... | 123 | 117 | 2.62 | 1.85 | 1.73 | 1.94 | 1.83 |
| 1972 | 1-ம் காலாண்டு ... | 94 | 104 | 2.75 | 2.07 | 1.83 | 1.90 | 1.93 |
| | 2-ம் காலாண்டு ... | 145 | 91 | 2.85 | 1.95 | 1.85 | 1.99 | 1.93 |
| | 3-ம் காலாண்டு ... | 104 | 119 | 2.71 | 2.00 | 1.78 | 1.88 | 1.89 |
| | 4-ம் காலாண்டு ... | 128 | 102 | 2.77 | 1.94 | 1.70 | 1.78 | 1.81 |

மூலங்கள்: தேயிலைக் கட்டுப்பாட்டாளரின் நிருவாக அறிக்கை
சுங்கப்பகுதி, இலங்கை
கொழும்பு தேயிலை தரகர் சங்கம்

* சுங்கப் பகுதியினரால் திருத்தியமைக்கப்பட்டபடி.

**இலண்டன் ஏலங்கள்**

ஐக்கிய இராச்சியத்தில்[1] சுருக்கமடைந்துவரும் எமது தேயிலைச்சந்தை பற்றிக் கவனிக்குமிடத்து 1972 ஆம் ஆண்டில், 1971 ஆம் ஆண்டோடு ஒப்பிடுமிடத்து, இலண்டன் ஏலங்களில் விற்பனை செய்யப்பட்ட மொத்த அளவு குறிப்பிடத்தக்க அளவு குறைவுற்றுக் காணப்பட்டது [அட்டவணை 11 (ஓ) 8]. எனினும் இலங்கையிலிருந்து அனுப்பப்பட்ட தேயிலைகளின் அளவும், இந்தியாவில் இருந்து அனுப்பபட்ட தேயிலையின் அளவு இதைவிடக் குறைந்த அளவிலும் உள்நாட்டு ஏலங்களோடு ஒப்பிடுகையில் இலண்டன் ஏலங்களில் காணப்பட்ட கவர்ச்சியற்ற தன்மை காரணமாக கணிசமான அளவு ழ்ச்சியுற்றது. இதற்கு மாறாக ஆபிரிக்க நாடுகள், லண்டன் ஏலங்களுக்கு அவர்களின் தேயிலைக்கான விலைகள் சராசரி விலைகளை விடக்கூடிய அளவு வீழ்ச்சியுற்றபோதும் அதிக அளவு தேயிலையை ஏற்றுமதி செய்தன.

அட்டவணை II (ஓ) 8

**தேயிலை உற்பத்தி நாடுகளினால் இலண்டன் ஏலங்களில் விற்கப்பட்ட தேயிலைகளின் அளவுகளும், அவைகளின் சராசரி விலைகளும்**

| நாடுகள் | இலண்டன் ஏலங்களில் விற்கப்பட்ட அளவுகள் (ப. இ. கி. கிராம்கள்) | | | | சராசரி விலைகள் (கிலோ கிராமுக்கு புதிய பென்ஸ்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1969 | 1970 | 1971 | 1972 | 1969 | 1970 | 1971 | 1972 |
| 1. வடஇந்தியா ... | 60.4 | 30.4 | 54.5 | 40.6 | 41.56 | 46.77 | 42.14 | 42.87 |
| 2. தென்இந்தியா ... | 5.0 | 2.5 | 2.0 | 1.4 | 31.63 | 40.42 | 39.90 | 37.88 |
| 3. இலங்கை முழுவதும் | 42.9 | 36.5 | 32.2 | 22.0 | 44.55 | 46.98 | 45.33 | 45.47 |
| 4. ஆபிரிக்கா முழுவதும் | 35.1 | 37.4 | 35.2 | 46.1 | 35.71 | 44.00 | 43.01 | 40.49 |
| கென்யா ... | 13.2 | 14.2 | 12.4 | 20.6 | 44.25 | 48.66 | 47.25 | 43.56 |
| உகண்டா ... | 5.0 | 3.2 | 3.8 | 5.2 | 36.76 | 46.84 | 43.64 | 40.97 |
| தன்சானியா ... | 4.6 | 5.0 | 5.0 | 5.8 | 39.89 | 48.49 | 45.39 | 41.71 |
| 5. மொத்தம் ... | **145.4** | **108.7** | **125.0** | **112.7** | **40.51** | **45.67** | **43.25** | **42.24** |

மூலம்: இலண்டன் தேயிலைத் தரகர் சங்கம்

ஐக்கிய இராச்சியத்தின் 1972 ஆம் ஆண்டில் விலைகள் பெருமளவுக்கு உயர்வுற்றபோதும், 1970,1971 ஆம் ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் எல்லாத் தேயிலைகளினதும் சராசரி விலை, இலண்டன் ஏலங்களில் 1972 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்தது. எனினும், இலங்கை, வடஇந்திய தேயிலைகளுக்குக் கிடைத்த விலைகள் 1971 ஆம் ஆண்டில் பெறப்பட்டதைவிட சிறிதளவு அதிகமாகக் காணப்பட்டது. இலங்கைத் தேயிலைக்குக் கிடைத்த இந்தச் சிறிதளவு அதிக விலைக்கு, இலண்டன் ஏலங்களுக்கு அனுப்பப்பட்ட தேயிலையின் அளவு குறைவாக இருந்தமை காரணமாக இருக்கலாம். பருவகாலப்போக்குகளுடன் பார்க்குமிடத்து மே, யூன், திசெப்பர் மாதங்களில் அதிக விலைகள் பதிவு செய்யப்பட்டன.

1. முன்னால் பார்க்கவும். பக்கம் 257

**பொட்டணங்களிலான தேயிலை**

1972ஆம் ஆண்டில் பொட்டணங்களில் அடைக்கப்பட்ட தேயிலை மூலம் கிடைத்த ஏற்றுமதி வருவாய் ரூ. 1.024 இலட்சமாக அமைந்து, முன்னைய ஆண்டினைவிட ரூ. 418 இலட்சம் உயர்வாகக் காணப்பட்டது. இதை ஏற்றுமதி அளவுப்படி பார்க்குமிடத்து இரு ஆண்டுகட்கும் முறையே 324 இலட்ச, 227 இலட்ச, இருத்தல்களாக விளங்கிற்று.

கடந்த காலத்தினைப் போலவே லிபியாவே இலங்கையின் பொட்டணத்தில் அடைக்கப்பட்ட தேயிலை உற்பத்தியின் பிரதான கொள்வனவாளராக விளங்கி, இவ்வுற்பத்தி மூலம் கிடைத்த வெளிநாட்டு ஏற்றுமதி வருவாயில் 75 சதவீதத்துக்கு வகை கூறியது. சவுதி அரேபியா, குவைற், லெபனுன் ஆகிய நாடுகட்கும் குறிப்பிடத்தக்க அளவு ஏற்றுமதி செய்யப்பட்டது.

**உடனடித் தேயிலை**

உடனடித் தேயிலை உற்பத்தி 1972இல் பிரதானமாக உற்பத்தி செய்வதில் ஏற்பட்ட இடர்பாடுகள் காரணமாக 36.2 சதவீதத்தால் 254,492 இருத்தல்களாக வீழ்ச்சியுற்றது. ஏற்றுமதிகள் 1971ஆம் ஆண்டின் 266,217 இருத்தல்களிலிருந்து 235 804 இருத்தல்களாக வீழ்ச்சியுற்றது. பெறுமதி நியதிப்படி ரூ. 6 இலட்சம் கொண்ட வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டது.

1972ஆம் ஆண்டில் இவ்வுற்பத்திக்கான பிரதான சந்தைகளாக ஐக்கிய இராச்சியம் (79.4 சதவீதம்), சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசு (8.8 சதவீதம்), அவுத்திரேலியா (4.9 சதவீதம்) என்பவை விளங்கின.

**பன்னாட்டுத்தேயிலைக் கூட்டாலோசனைகள்**

1973 செத்தெம்பரில் நடைபெற்ற உணவு விவசாய நிறுவனத்தின் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில், 31 மாச்சு, 1973, 1974, 1975[1]ஆம்ஆண்டுகளில் முடிவடையும் 12 மாதங்கள் கொண்ட காலப்பகுதிகளில் உலகம் முழுவதுக்குமான அனுமதிப் பங்கு அளவுகள் முறையே 619, 645, 670 ஆயிரம் மெற்றிக் தொன்கள் என்று தீர்மானிக்கப்பட்டது. இதன்படி இலங்கைக்கான பங்கு 1972/73 காலப்பகுதிக்கு 208.6 ஆயிரம் மெற்றிக் தொன்களும், 1973/74 காலப்பகுதிக்கு 214.2 ஆயிரம் மெற்றிக் தொன்களும் ஆகும்.

**தேயிலை ஏற்றுமதித்தீர்வை விடுதொகைத்திட்டம்**

கொழும்பு ஏலங்களில் குறைந்த அளவு விலைகளையே பெறும் தேயிலைகளுக்கு ஏற்றுமதித் தீர்வையில் ஒரு விடுதொகையினை வழங்கும் இத்திட்டம் சில மாற்றங்களுடன் 1972ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைமுறையில் இருந்து

1. தற்காலிகமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

வந்தது. 11, நவெம்பர் 1972இல் இருத்தல் ரூ. 2/-க்குக் குறைவாகவிற்கப்படும் தாழ்ந்த பிரதேச நடுத்தரப்பிரதேசத் தேயிலைகளுக்கு வழங்கும் ஆகக்கூடிய விடு தொகை10 சதத்திலிருந்து 15 சதமாகவும், இதே விலையில் விற்கப்படும் உயர்ந்த பிரதேசதேயிலைகட்கு 5 சதத்திலிருந்து 10 சதமாகவும் அதிகரிக்கப்பட்டது.

கீழேயுள்ள அட்டவணை 11 (ஒ) 9இல் உயரங்களின் படியான தேயிலை வகை கட்கு வழங்கப்பட்ட விடுதொகையின் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II (ஓ) 9

தேயிலை ஏற்றுமதித் தீர்வை விடுதொகைத் திட்டம்
கொழும்பு ஏலங்கள் — 1972

| | விடுதொகை அளிக்கப் பட்ட தேயிலையின் அளவு(இருத்தல்கள்) | அளிக்கப்பட்ட விடு தொகையின் பெறு மானம்(ரூபாய்கள்) | சேர்க்கப்பட்ட ஏற்று மதித் தீர்வைகள் | பெறுமான விகித அடிப்படையிலான விற் பனை வரிகள் மூலம் பெறப்பட்ட வருமானம் |
|---|---|---|---|---|
| உயர்பிரதேசம் | 42,124,464 | 2,186,484 | வி. கி. | வி. கி. |
| நடுத்தரப் பிரதேசம் | 64,101,230 | 4,692,223 | வி. கி. | வி. கி. |
| தாழ்ந்த பிரதேசம் | 41,448,609 | 3,064,142 | வி. கி. | வி. கி. |
| மொத்தம் | 147,673,763 | 9,942,849 | 163,338,821 | 46,487,725 |

மூலம்: தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
இலங்கை சுங்கத் தரவுகள்,
தேயிலை ஏற்றுமதி ஆணையாளர்.

### பெறுமதி அடிப்படையிலான விற்பனை வரி

மொத்த விற்பனை விலைக்கும் குறைந்த அளவு விலைக்கும் இடையே இருந்த வேறுபாட்டில் ஐம்பது சதவீதத்தை அரசாங்கம் பெறுமதி அடிப்படையிலான விற்பனை வரி மூலம் பெற்றுக்கொண்டது. இவ்வரி இந்த ஆண்டிலும் தொடர்ந்து நடைமுறையில் இருந்தது.

"குறைந்தளவு விலை" நவெம்பர் 10இல், வரவுசெலவுத்திட்டத்தில் ரூ. 1.85 இல் இருந்து ரூ. 2.00 ஆக உற்பத்தியாளருக்கு ஆறுதல் அளிக்கும் ஓர் நடவடிக்கையாக அதிகரிக்கப்பட்டது.

## றப்பர்

### உற்பத்தியும் ஏற்றுமதியும்

றப்பர் உற்பத்தி 1971ஆம் ஆண்டு மட்டத்தினைவிட 1972இல் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. ஆனால், ஏற்றுமதிமட்டம் 1971ஆம்ஆண்டினைவிட 1972இல் சற்றுஉயர்வடைந்து காணப்பட்டது.(அட்டவணை 11 (ஒ) 10 எனினும் 1970ஆம்

ஆண்டு எண்தொகைகளோடு ஒப்பிடுகையில் ஏற்றுமதி 20 சதவீதத்தினலும் உற்பத்தி 12 சதவீதத்தினலும் வீழ்ச்சியடைந்தது. 1971ஆம் ஆண்டில் உற்பத்தியும் ஏற்றுமதியும் ஏப்பிரல், மே, மாதங்களில் நடைபெற்ற உள்நாட்டுக் கலவரங்களால் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னைய ஆண்டினைவிடக் குறைவாகக் காணப்பட்டன. 1970ஆம் ஆண்டுவரை காணப்பட்ட உயர்வான போக்கு 1972ஆம் ஆண்டில் பின்னடைவதற்கு, காலநிலையைவிட குறைந்தவிலைகளும் குறைந்த அளவிலான உரப்பாவிப்பும் காரணமாக இருந்தன. மீளப் பயிரிடப்பட்ட பிரதேசங்களின்உயர்ந்த விளைச்சலினலேற்பட்ட அதிகரிப்புக்கள் இந்தக் குறைந்த விளைச்சலினை ஈடுசெய்தன. 1966ஆம் ஆண்டில் றப்பர் பயிர்ச் செய்கையில் உள்ள மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமான நிலத்தை உள்ளடக்கிய 240,919 ஏக்கர்கள் மீளப்பயிரிடப்பட்டன. இவை 1972ஆம் ஆண்டில் பயன்அளிக்கக் கூடியதாகவிருக்கும்.

ஆர். எஸ். எஸ். 1தரத்தின் மாதச் சராசரி விலை கொழும்புச்சந்தையில் இருத்தல் 72 சதத்துக்கும் 74 சதத்துக்கும் இடையே இருந்த குறைந்த விலைகள் நிலவி வந்த ஆண்டின் பெரும்பகுதி முழுவதும் முக்கியமாக முதல் நான்கு மாத காலப்பகுதிகளிலும் குறிப்பாக சிறு உற்பத்தியாளர்கள் பாரதூரமாக பாதிக்கப்பட்டனர். 1971ஆம் ஆண்டிலும் 1972ஆம் ஆண்டிலுமான மொத்த ஏற்றுமதிகள் 2,850 இலட்சம் இருத்தல்களாக இருந்த போதிலும் 1972ஆம் ஆண்டின் யூன்-செத்தெம்பர் காலப்பகுதியில் ஏற்றுமதி செய்யப்பட்ட தொகை 790 இலட்சம் இருத்தல்கள் மட்டுமேயாகும். ஆனல், 1971ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 970 இலட்சம் இருத்தல்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. உற்பத்திக்கும் ஏற்றுமதிக்கும் இடையில் தவிர்க்கமுடியாத காரணத்தினல் ஏற்பட்ட கால இடைவெளி சனவரிக்கும் ஏப்பிரல் 1972க்குமிடையில் குறைந்த விலைகள் ஏற்படுவதற்கும் குறைந்த அளவு உற்பத்தி ஏற்படுவதற்கும் காரணமாகவிருந்தது கொழும்புச் சந்தையில் ஆர். எஸ். எஸ். 1 ரக றப்பருக்கு இருத்தலுக்கு 80 சதத்துக்கும் 84 சதத்துக்குமிடையில் சார்பான விலைகள் நிலவியமை 1971ல் உயர்ந்த உற்பத்திக்கு துணை நின்றது என நாம் ஊகிக்கலாம். எனவே குறைந்த விலைகட்கேற்ப உற்பத்தியும் குறைந்தது. அத்துடன் சிறு உடமையாளர்களின் றப்பர் உற்பத்தி எல்லை நிலங்கள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டன எனவும் கருதலாம்.

அரசாங்கம் ஆர். எஸ். எஸ். 1, 11 ரகங்களை உற்பத்தி செய்வோருக்காக ஓர் உத்தரவாத விலைத்திட்டத்தை அறிவித்தது. இதன்படி கொழும்பில் விற்பனை செய்யும்போது ஆர். எஸ். எஸ். 1, 11 ரகங்கள் முறையே இருத்தல் 81 சதமாகவும் 74 சதமாகவும், வெளியிடங்களில் விற்பனை செய்யப்படும்போது முறையே இருத்தல் 80 சதமாகவும் இருத்தல் 73 சதமாகவும் தீர்மானிக்கப் பட்டது. இத்திட்டம் 1972 செத்தெம்பர் 1ஆந் திகதி தொட்டு ''றப்பர் உற்பத்தியாளர் தங்கள் தோட்டங்களைக் கைவிடாமல் அல்லது கவனியாமல் விடாது பாதுகாப்பதற்காக'' நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

வளமாக்கியின் பயன்பாடு 1970 ஆம் ஆண்டின் 21.4 ஆயிரம் தொன்களி லிருந்து 1971 ஆம் ஆண்டில் 16.2 ஆயிரம் தொன்களாயும் 1972 இல் இது மேலும் 11 .6 ஆயிரம் தொன்களாகவும் குறைந்தது.

1972 ஆம் ஆண்டில் மீளப்பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 8,722 ஏக்கர் களாக விளங்கியது. இது ஐந்து ஆண்டுத்திட்டத்தின்படி வருடத்துக்கு மீளப்பயிரி டப்படவேண்டிய இலக்காகிய 15,000 ஏக்கர்களை விடக் குறைவாகக் காணப் பட்டது.

1972 இன் மொத்த றப்பர் உற்பத்தியில் உள்நாட்டில் 4.4 சதவீதம் நுகர்வு செய்யப்பட்டது இது, 1971 ஆம் ஆண்டில் நுகர்வு செய்யப்பட்ட 112 இலட்சம் இருத்தல்களுடன் ஒப்பிடும்போது, 21.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது.

அட்டவணை II (ஓ) 10

றப்பரின் உற்பத்திகளும், ஏற்றுமதிகளும், விலைகளும்

| ஆண்டு | உற்பத்தி (ப. இ. இரு.) | | | ஏற்றுமதிகள் (ப. இ. இரு) | | | க. ஏ. பெ. விலை (இரு. ரூ. ச.) | | | கொழும்புச் சந்தை விலை இருத்தலுக்கு (ரூ. ச.) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சீட் | கிரேப் | முழுவதும் | சீட் | கிரேப் | முழுவதும் | சீட் | கிரேப் | முழுவதும் | ஆர்.எஸ்.எஸ். இல. 1 | லெற்ரெக்ஸ் இல. 9 |
| 1968 | 195.0 | 131.2 | 327.9 | 189.7 | 137.8 | 328.3 | 0.98 | 1.04 | 1.01 | 0.88 | 1.11 |
| 1969 | 194.6 | 136.3 | 332.5 | 179.7 | 135.1 | 314.8 | 1.34 | 1.41 | 1.37 | 1.04 | 1.16 |
| 1970 | 211.0 | 138.3 | 350.9 | 221.7 | 132.5 | 354.2 | 1.23 | 1.26 | 1.24 | 0.91 | 1.12 |
| 1971 | 175.8 | 134.7 | 311.8 | 156.0 | 129.1 | 285.2 | 0.98 | 1.19 | 1.08 | 0.79 | 1.13 |
| 1972 | 184.0 | 122.5 | 309.4 | 164.6 | 119.3 | 285.7 | 0.90 | 0.97 | 0.93 | 0.81 | 0.89 |
| 1972 இன் | | | | | | | | | | | |
| 1 ஆம் காலாண்டு | 46.6 | 37.1 | 84.4 | 41.1 | 33.2 | 74.7 | 0.90 | 0.98 | 0.94 | 0.73 | 0.74 |
| 2 ஆம் காலாண்டு | 44.6 | 25.2 | 70.5 | 74.7 | 30.1 | 105.3 | 0.90 | 0.93 | 0.91 | 0.78 | 0.84 |
| 3 ஆம் காலாண்டு | 42.2 | 24.4 | 67.3 | 28.9 | 26.6 | 56.0 | 0.87 | 0.96 | 0.92 | 0.82 | 0.88 |
| 4 ஆம் காலாண்டு | 50.6 | 35.8 | 87.2 | 19.9 | 29.4 | 49.7 | 0.91 | 0.03 | 0.98 | 0.92 | 1.11 |

மூலம்: றப்பர்க் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.
இலங்கைச் சுங்கத் தரவுகள்,
இலங்கை றப்பர் தரகர் சங்கம்.

### விலைகள்

விலைப்போக்குகள் முதலாவதாக பன்னாட்டுச் சந்தை நிலைமைகளின் பிரதி பலிப்பாகவே கருதப்படுகின்றன; இயற்கை றப்பரின் கொள்வனவு நிரம்பலை விட விஞ்சியபோதும், அதன் நிரம்பல் அளவு 1971 ஆம்ஆண்டின் மட்டத் தினை விட சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது; இயற்கை றப்பரின் ஆண்டுச்சராசரி விலை தொடர்ந்து வீழ்ச்சியுற்றுச் சென்றது. இதற்குபெரும்பாலும் செயற்கை

றப்பரின் வெளியீட்டு அளவு அதிகரித்தமை காரணமாக இருக்கலாம். அட்டவணை 11 (ஓ) 11 உதாரணமாக ஆர்.எஸ்.எஸ். 1ம் ரகத்தின் விலை இலண்டன் சந்தையில் 1961 ஆம் ஆண்டின் மெற்றிக்தொன் விலையான 227.4 பவுண்களிலிருந்து 148.9 பவுண்களாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. இதேபோல நியூயோக்கிலும் தொடர்பான காலப்பகுதியில் ஒரு மெற்றித் தொன்னின் விலை 650.5 ஐக்கிய அமெரிக்க டொலர்களிலிருந்து 402.1 டொலர்களாக வீழ்ச்சியடைந்தது. செயற்கை றப்பர் மொத்த றப்பர் நிரம்பலில் தனது பங்கினை சிறிதளவால் அதாவது 1971 இன் 63 சதவீதத்திலிருந்து 1972ல் 64 சதவீதத்தால் அதிகரித்தது.

**அட்டவணை II (ஓ) 11**

**இயற்கை செயற்கை றப்பர்களின் உலக நிரம்பல், நுகர்ச்சி, கையிருப்புக்கள்**

மெற்றிக் தொன்கள்.*

| | இயற்கை றப்பர் | | செயற்கை றப்பர் | |
|---|---|---|---|---|
| | 1971 | 1972 | 1971 | 1972 |
| நிரம்பல் (சன–செத்) ... | 22,10,000 | 2207,500 | 3,722,500 | 3,973,000 |
| நுகர்ச்சி (சன–செத்) ... | 22,22,500 | 2,312,500 | 3,722,500 | 3,952,500 |
| கையிருப்பு (செத்தெம்பர் இறுதியிலுள்ளபடி .. | 790,000 | 760,000 | 1,117,500 | 1,80,0000 |

மூலம் றப்பர் புள்ளி விபரச் செய்தித் திரட்டு

* கடைசியாகக் கிடைத்த எண் தொகைகளின்படி

1972 ஆம் ஆண்டில் பன்னாட்டுச் சந்தையில் ஏற்பட்ட விலைத்தளம்பல் பின்வருமாறு;

சனவரி தொட்டு விலைகள், கேள்விக்குறைவினாலும் வர்த்தகக்கட்டளைகள் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவும் ஏப்பிரல் வரை வீழ்ச்சியடைந்தன. ஏப்பிரலில் மலேசிய இருப்புக்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான மக்கள் சீனக்குடியரசினது பேச்சுவார்த்தைகள் முடிவடைந்து, அறிக்கைகள் வெளியிடப்பட்டதும் கொள்வனவு நடவடிக்கைகள் அதிகரித்து சந்தையில் நிலவி வந்த மந்த நிலை மாற்றமடைந்தது. அதன்பின்னர், ஐக்கிய இராச்சியத்தின் துறைமுகவேலை நிறுத்த விளைவுகளும், ஐக்கிய அமெரிக்க கிழக்குக்கரைதுறைமுக வேலை நிறுத்தம் மீண்டும் தொடங்கியமையும், ஸ்டேர்லிங் மீதான அமுக்கமானது விலைகளின் மீது அதன்பின்னர் தாக்கத்தை ஏற்படுத்தின. உருசியாவினதும், கிழக்கு ஐரோப்பாவினதும், யப்பானினதும் கொள்வனவுகள் அதிகரித்தமையின் காரணத்தால் விலைகள் ஒற்றோபர் தொட்டு திசெம்பர்வரை கூரிய அதிகரிப்பினைக் காட்டின. விலைகள், ஒற்றோபர் தொட்டு திசெம்பர்வரையிலான

காலப்பகுதியில் நியூயோக்கில் 5.9 சதவீதத்திஞலும், இலண்டனிலும் சிங்கப்பூரிலும் முறையே 16.5 சதவீதத்திஞலும், 11.4 சதவீதத்திஞலும் உயர்ந்தன. புதிய ஆண்டில் உயர்ந்த விலைகள் எதிர்பார்க்கப்பட்டதோடு திசெம்பரில் என்றுமிலா அளவிற்கு உயர் மட்டங்களை அடைந்தன.

உள்நாட்டு விலைகளும் தாமாகவே உலகப்போக்கினைப் பின்தொடர்ந்தன. ஆர். எஸ் எஸ். 1 இன் மாதச் சராசரி விலை சனவரியின் இரு.72 சதத்திலிருந்து திசெம்பரில் 94 சதமாகவும் லரெக்ஸ் கிரேப் 9ஆம் ரகம் சனவரியில் 75 சதத்திலிருந்து திசெம்பரில் ரூ. 1.19 ஆகவும் உயர்வடைந்தன. ஒற்ருேபருக்கும் திசெம்பருக்கும் இடையே ஆர். எஸ். எஸ். 1 இன் விலை 4.4 சதவீதத்தாலும் லரெக்ஸ் கிரேப்பின் விலை 15.5 சதவீதத்தாலும் அதிகரித்தன. ஆர். எஸ். எஸ். 1 ஆம் ரகத்தின் கொழும்புச் சந்தைவிலை 1972 இல் 1971 ஆம் ஆண்டு மட்டத்தைவிடச்சற்று அதிகரிப்பைக்காட்டியது. இதே வேளையில் லரெக்ஸ் கிரேப் 9 ரகத்தின் விலை 1971 இன் ரூ. 1.14 இல் இருந்து 1972 இல் 89 சதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

**சேரிடங்களின்படியான ஏற்றுமதிகள்**

கீழேயுள்ள அட்டவணை 11 (ஓ) 12 இலங்கையின் பிரதான கொள்வனவாளருக்கான ஏற்றுமதி விபரங்களைத் தருகின்றது.

**அட்டவணை II (ஓ) 12**

**றப்பர் ஏற்றுமதிகள் பற்றிய நாடுகளின்படியான பகுப்புகள்**

| நாடு | அளவு ப. இ. இரு. | | மொத்தத்தின் சதவீதப் பங்குகள் | |
|---|---|---|---|---|
| | 1971 | 1972 | 1971 | 1972 |
| மக்கள் சீனக் குடியரசு ... | 128.9 | 118.3 | 45.2 | 41.4 |
| ஐ. சோ. சோ. கு. .. | 20.4 | 11.4 | 7.2 | 4.0 |
| ஐ. அ. நா. ... | 18.9 | 15.7 | 6.6 | 5.5 |
| போலந்து ... | 18.2 | 11.3 | 6.4 | 3.9 |
| உருமேனியா .. | 10.9 | 14.8 | 3.8 | 5.2 |
| யப்பான் ... | 5.4 | 3.7 | 1.9 | 1.3 |
| ஐக்கிய இராச்சியம் ... | 4.6 | 10.3 | 1.6 | 3.6 |
| ஐ. பொ. ச. ... | 35.3 | 49.1 | 12.4 | 17.2 |
| ஏனைய நாடுகள் ... | 42.6 | 51.1 | 14.9 | 17.9 |
| மொத்தம் ... | 285.2 | 285.7 | 100.0 | 100.0 |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்.

**தெங்கு உற்பத்திகள்[1]**

**ஏற்றுமதிகள்**

தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதி வருவாய் 1972 இல் ரூ. 2,664 இலட்சமாக அமைந்து 1971 ஆம் ஆண்டினைதைவிட 4.8 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருந்தது. 1971, 1970 ஆம் ஆண்டுகளில் முறையே 16.6 சதவீதமும் 6.5 சதவீதமும் அதிகரித்திருந்தது.

தெங்கு ஏற்றுமதிகள், தேங்காய் அடிப்படையில் தரப்பட்டுள்ளமையால், அதன்படி நோக்குகையில் 1971 ஆம் ஆண்டின் 10,190 இலட்சம் தேங்காய் கட்டும், 1970 இன் 8,800 இலட்சம் தேங்காய்கட்டும் எதிராக இந்த ஆண்டில் 12,580 இலட்சமாக விளங்கியது. (அட்டவணை 11 (ஒ) 13 ஐப் பார்க்கவும்.) 1972 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருவாய் வீழ்ச்சிக்குரிய காரணம் தெங்கு ஏற்றுமதிகளின் எல்லா விலைகளும் வீழ்ச்சியடைந்தமையேயாகும். 1972 இல் தேங்காய் எண்ணெய் மூலம் பெறப்பட்ட வருடாந்த சராசரி க. ஏ. பெ. விலைகளே (ரூ. 1548.69 தொன்னுக்கு) கடந்த நாலு ஆண்டுகளிலும் பெறப்பட்ட ஆகக்குறைந்த விலையாகும்; கொப்பருவிற்குக் கிடைத்த சராசரி க.ஏ. பெ. விலையே (ரூ. 1185.55 தொன்னுக்கு) கடந்த ஏழு ஆண்டுகளிலும் பெறப்பட்ட ஆகக்குறைந்த விலையாகும். தேங்காய்த் துருவலுக்குப் பெறப்பட்ட ஆண்டுச்சராசரி விலையே (இரு. 72 சதம்) கடந்த நாலு ஆண்டுகளிலும் கிடைத்த ஆகக்குறைந்த விலையாகும்.

**பொதுவிலைப் போக்குக்கள்**

இலண்டன் பண்டச்சந்தையினல் குறிப்பிடப்பட்டபடி, 1971 ஆம் ஆண்டில் பன்னாட்டுச்சந்தையில் காணப்பட்ட தேங்காய் எண்ணெய், கொப்பரு என்பவற்றின் வீழ்ச்சிப்போக்கு ஆண்டின் முதல் எட்டு மாதங்களிலும் நீடித்துக்காணப்பட்டது. தேங்காய் எண்ணெயின் விலை ஏற்கனவே குறைந்த விலையாகிய லோங் தொன் ஒன்று £ 118.35 ஆக சனவரியில் இருந்து £ 98.00 ஆக யூன் மாதத்திலும் £ 91.80 ஆக ஒகத்து மாதத்திலும் வீழ்ச்சியடைந்தபோதிலும், அதன் பின்னர் திசெம்பரில் லோங் தொன் ஒன்று £ 104.00 ஆக சிறிதளவில் அதிகரித்தது. 1972 ஆம் ஆண்டின் இலண்டன் பண்டச்சந்தையின் சராசரி வருடாந்த விலையாகிய ஒரு லோங் தொன் £ 102.14, 1971 ஆம் 1970 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட முறையே £ 147.66, £ 159.29 களுடன் ஒப்பிடுகையில் மிகவும் பாதகமாகச் காணப்படுகிறது. கொப்பருவின் வருடாந்தச் சராசரி விலையினைப் பொறுத்தவரையிலும் பன்னாட்டுச்சந்தையில் இதே நிலை காணப்பட்டது.

---

1, தெங்குக் கைத்தொழிலில் பக்க உற்பத்திகள் அதாவது தேங்காய்ச் சிரட்டைக்கரி, தெங்குத் தும்புகள் என்பவை பின்னால் கவனிக்கப்பட்டுள்ளன.

இது 1972 இல் ஒரு லோங் தொன் £ 144.86 இருந்தது. 1971 1970 ஆம் ஆண்டுகளில் முறையே இதன் விலை 191.54 பவுணுகவும், 198.08 பவுணுகவும் விளங்கியது. தேங்காய்த் துருவலைப் பொறுத்தவரையில் முன்னைய இரு காலப் பகுதியினுடன் ஒப்பிடுகையில் சனவரி தொட்டு ஓகத்து வரையான பகுதிக்குரிய இலண்டன் விலைகள் குறைந்து காணப்பட்டபோதும், ஆண்டின் மிகுதிக்காலப்பகுதி முழுவதும் 1971 ஆம் ஆண்டில் பெறப்பட்டவிலை கிடைத்தது. இதன் விளைவாக 1972இன் ஆண்டுச்சராசரி விலை லோங் தொன் ஒன்றுக்கு 157.2ஆக, முறையே 1971ஆம் 1970ஆம் ஆண்டுகளில் பெற்ற விலைகளான லோங் தொன் ஒன்று £ 186.2, £ 188.6 ஆகியனவுடன் ஒப்பிடுகையில் விளங்கியது.

1972ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதிகளிலும் தேங்காய் எண்ணெய் கொப்பரு என்பவைகளின் குறைந்த பன்னாட்டுச்சந்தை விலைக்கு, இக்காலப்பகுதியில் இதற்குப்போட்டியான எண்ணெய்வகைகள், கொழுப்பு வகைகளின் உயர்ந்த மட்ட உற்பத்தியே காரணமாகும். அத்தோடு தேங்காய் எண்ணெய், கொப்பரு என்பவற்றில் ஏற்றுமதி அதிகரிப்பு மிகக்குறைவாக இருந்தமைக்குரிய காரணம் முக்கியமாக பிலிப்பைன்சின் ஏற்றுமதி விரிவடைந்தமையாகும். எப்படியிருப்பினும், பிலிப்பைன்சின் ஏற்றுமதிகள் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த போதும் ஆண்டின் இறுதிப்பகுதியில் போட்டியாக இருந்த எண்ணெய், கொழுப்பு வகைசளின் நிரம்பல் குறைந்து தேங்காய் எண்ணெய், கொப்பரு என்பவற்றின் விலைகள் அதிகரிப்பினைப்பதிவு செய்யத்தொடங்கின.

தேங்காய் எண்ணெய், கொப்பரு என்பவற்றின் கொழும்புச்சந்தை விலைகள், பன்னாட்டுச்சந்தையில் நிலவிவந்த போக்குகளைப் பிரதிபலித்தன. இவ்வாறுக கொழும்புச்சந்தையின் தேங்காய் எண்ணெய்க்கான 1972ஆம் ஆண்டின் வருடாந்தச் சராசரிவிலை, லோங் தொன் ஒன்று ரூ. 1135.90ஆக விளங்கியது. இது 1971ஆம் 1970ஆம் ஆண்டுகளின் விலைகளாகிய ரூ. 1406 51. ரூ. 1503.71 என்பவற்றுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவாகக் காணப்பட்டது. இதேபோல கொப்பருவைப்பொறுத்தவரையிலும் கொழும்புச் சந்தை ஆண்டுச் சாராசரிவிலை கண்டி ஒன்று ரூ. 196.30ஆக அமைந்தது. 1971ஆம் 1970ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இது முறையே ரூ. 213.16 ரூ. 247.56 ஆக விளங்கின. தேங்காய்த்துருவலைப்பொறுத்தவரை கொழும்புச் சந்தையின் விலைகள் எப்போதும் இலண்டன் சந்தை போக்குகளைப்பின்பற்ற வில்லை. காரணம் பெரும்பாலும் கொப்பரு, தேங்காய் எண்ணெய் என்பவற்றை விட இவ்வுற்பத்தியில் நாணய மீள இணைப்புத் தாக்கம் அதிகமாக இருந்தமையும், திசெம்பரின் நிரம்பலில் ஏற்பட்ட தட்டுப்பாடுமாக

இருக்கலாம். எனினும், ஆண்டு முழுவதும் கொழும்புச் சந்தையினதும், இலண்டன் சந்தையினதும் பொதுவான போக்கு ஒன்ருகவே காணப்பட்டது. கொழும்புச்சந்தையின் தேங்காய்விலை உலகச்சந்தை நிலைமைகளினுல் பாதிக்கப்பட்டதனை விடக் கூடுதலாக உள்நாட்டுச்சந்தையினுலேயே பாதிக் கப்பட்டு 1972ஆம் ஆண்டில் 1,000 தேங்காய்களின்விலை, ரூ. 226/-ஆக விளங்கியது. இது 1971ஆம் 1970ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 236.18, 237.50ஆக விளங்கியது. ஆனுல், ஆண்டின் முற்பகுதியில் நாட்டில் நிலவிய வரட்சிநிலை காரணமாக, பிரதான தெங்கு உற்பத்திப்பிரதேசங்களில் கொழும்புச்சந்தைவிலை திசெம்பர் அளவில் 1,000 தேங்காய்கள் ரூ. 263/-ஆக உயர்ந்தது.

**உற்பத்தியின் சில பண்புகள்**

1972ஆம் ஆண்டில் பிரதான தெங்கு வளர்ப்புப்பிரதேசங்களில் 1971ஆம் ஆண்டில் சாதமான காலநிலை இருந்து வந்தமையால், வளமாக்கிப் பயன்பாடு 1971ஆம்1970ஆம் ஆண்டுகளில் இருந்த முறையே 58.6, 64.3 ஆயிரம் தொன் களிலிருந்து 48.5 ஆயிரம் தொன்களாக வீழ்ச்சியடைந்தபோதும், தெங்கு உற்பத்தியில் அதிகரிப்பு காணப்பட்டது. எனினும், 1972ஆம் ஆண்டின் முதற்காற்பகுதியில் ஏற்பட்ட கடும்வரட்சியின் விளைவுகளால் திசெம்பர் அள வில் நிரம்பல் குறைவடைந்து உள்நாட்டு நுகர்ச்சிக்கான தேங்காய்களின் விலை அதிகரித்ததோடு ஏற்றுமதி அளவும் சுருக்கமடையலாயிற்று. வரவுசெலவுத் திட்ட எடுத்துரைப்புகளின்படி ஏற்றுமதியினை தூண்டுவதற்காக ஒரு தொன் தேங்காய் எண்ணெய்க்கு வழங்கப்பட்ட உத்தரவாத விலையாக ரூ. 1250/- ஆக்கப்பட்டது. இது தேங்காய்களின் உயர்ந்த விலை காரணமாக, திசெம்பரில் எதிர்பார்த்த நோக்கத்தினை அடைவதில் குறைந்த அளவு பயனே கிடைக்கப் பெற்றது.

**சேரிடங்களின்படியான ஏற்றுமதிகள்**

**தேங்காயெண்ணெய்**

சீஞ தொடர்ந்தும், தேங்காயெண்ணெயின்[1] ஏற்றுமதி அளவு நியதிப்படி 32.6 சதவீதத்தையும், பெறுமான நியதிப்படி 37.6 சதவீதத்தையும் இறக்கு மதி செய்து மிகப்பெரிய கொள்வனவாளராக விளங்கியது. சீஞ 1972ஆம் ஆண்டில் 558 ஆயிரம் அந்தர் தேங்காயெண்ணெயைக் கொள்வனவு செய் தது. 1971ஆம் ஆண்டிலும் 1970ஆம் ஆண்டிலும் இத்தொகை முறையே 510,205 ஆயிரம் அந்தர்களாகக் காணப்பட்டது கடந்த காலத்தைப்

1. தேங்காய் எண்ணெய் தொகையாகவும், சிலிண்டர்களிலும், தூய்மையாக்கப்பட்டும் ஏற்றுமதி செய்யப் பட்டது.

போலவே, ஐ. சோ. சோ. குடியரசு எல்லாத் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியில் அளவு நியதிப்படி 14 சதவீதத்தையும் பெறுமான நியதிப்படி 15 சதவீதத்தையும் இறக்குமதிசெய்து இரண்டாவது பெரும் கொள்வனவாளராக விளங்கியது. ஐ. சோ. சோ. குடியரசு 1972இல் 239 ஆயிரம் அந்தர்களைக் கொள்வனவு செய்தது. ஒப்பிடுகையில் 1971ஆம் 1970ஆம் ஆண்டுகளில் இது முறையே 386 ஆயிரம், 255 ஆயிரம் அந்தர்களாக விளங்கியது. ஏனைய குறிப்பிடத்தக்க கொள்வனவாளர்கள் கனடா (ரூ. 174 இலட்சம்), ஐக்கிய இராச்சியம் (ரூ. 84இலட்சம்), பாக்கித்தான் (ரூ. 76 இலட்சம்), ஐரோப்பிய பொருளாதார சமூகம் (ரூ. 70 இலட்சம்), வங்காளதேசம் (ரூ. 53 இலட்சம்) ஆகும்.

**கொப்பரு**

கொப்பரு ஏற்றும்தியில் 1972இல் குறிப்பிடத்தக்க அளவு விரிவு ஏற்பட்டது. இது பிரதானமாக ஐ. சோ. சோ. குடியரசினுல் 493 ஆயிரம் அந்தர்கள்கொண்ட ரூ. 288 இலட்சம் பெறுமதியாக கொள்வனவின் காரணமாக ஏற்பட்டதாகும். 1971ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தக் கொப்பரு ஏற்றுமதியினைவிட ஐ. சோ. சோ. குடியரசுக்குச் செய்யப்பட்ட ஏற்றுமதி அளவு, பெறுமதி ஆகிய இரண்டு துறைகளில் அதிகமானதாக விளங்கியது. கொப்பருவில் ரூ. 154 இலட்சம் பெறுமதியான 251.5 ஆயிரம் அந்தர்களைக் கொள்வனவு செய்த பாக்கித்தான் இரண்டாவது பெரிய கொள்வனவாளராக விளங்கியது. இதேவேளையில் ஒரு காலத்தில் எமது வழமையான கொள்வனவாளராக இருந்த இந்தியா ரூ. 64 இலட்சத்து 70 ஆயிரம் பெறுமதியான 115.6 ஆயிரம் அந்தர்களைக் கொள்வனவு செய்தது.

**தேங்காய்த் துருவல்**

ஒப்புநோக்குகையில் 1972ஆம் ஆண்டில் குறைந்த அளவு தேங்காய் துருவலே ஏற்றுமதி செய்யப்பட்டது. ஏற்றுமதியில் 34 சதவீதத்தை ஐக்கிய இராச்சியம் கொள்வனவு செய்தது. (1971 இன் 350.7 ஆயிரம் அந்தர்கட்கு எதிராக 323.6 ஆயிரம் அந்தர்கள் ஆகும்) இதே வேளையில் ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் இவ்வுற்பத்தியில் 23 சதவீதமளவிலான கொள்வனவைச் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். இது 1971 ஆம் ஆண்டின் கொள்வனவாகிய 277 ஆயிரம் அந்தர்களைவிட 56 ஆயிரம் அந்தர்கள் குறைவானதாகும்.

**தேங்காய்கள்**

ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் இவ்வேற்றுமதிகளில் அரைவாசிக்கு மேலானவற்றைக் கொள்வனவு செய்தன. இதேவேளையில் எமது வழமையான கொள்வனவாளராகிய சேர்மன் இணைப்புக் குடியரசு ஏற்றுமதியில் ૯1 சதவீதமளவில் கொள்வனவு செய்தது.

## அட்டவணை II (ஓ) 13

### முக்கிய தெங்கு உற்பத்திகள்—ஏற்றுமதிகள்; அளவும், விலைகளும் 1968—1972

| | அளவு | | | | | க. எ பெ. விலைகள். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தேங்காய் எண்ணெய் ஆயிரம் அந்தர் | கொப்பரா ஆயிரம் அந்தர் | தேங்காய்த் துருவல் ஆயிரம் அந்தர் | தேங்காய்கள் ஆயிரம் தேங்காய்கள் | மொத்தம் (தேங்காய்க்கு சமமான பெறுமானங்களின்படி) ப. இ. தேங்காய்கள் | தேங்காயெண்ணெய் தொன்னொன்றுக்கு ரூபா | கொப்பரா கண்டிக்கு ரூபா | தேங்காய்த் துருவல் இருத்தல் ரூ. ச. | தேங்காய்கள் தே. சதம் |
| 1968 | 1,261 | 425 | 1,382 | 7,583 | 1,103 | 2,108.80 | 396.25 | 1.06 | 0.44 |
| 1969 | 1,103 | 381 | 1.018 | 10,332 | 905 | 1,953:90 | 341.29 | 0.77 | 0.41 |
| 1970 | 1,142 | 305 | 967 | 6,321 | 880 | 2,037.60 | 371.90 | 0.91 | 0.46 |
| 1971 | 1,388 | 344 | 1,043 | 8,567 | 1,019 | 2,142.40 | 349.72 | 0.88 | 0.45 |
| 1972 | 1,109 | 728 | 993 | 10,478 | 1,258 | 1,548.69 | 296.39 | 0.72 | 0 41 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்.

**ஏனைய விவசாய, கைத்தொழில்களல்லாத உற்பத்திகள்**

1972ஆம் ஆண்டின் விவசாய கைத்தொழில் அல்லாத உற்பத்தி வருவாய்கள் மூலம் ரூ. 1,416 இலட்சம் பெறப்பட்டது. இது 1971 ஆண்டு வருவாயினை விட ரூ. 121 இலட்சம் அதிகமானதாயும் 1970 ஆம் ஆண்டு வருவாயைவிட ரூ. 98 இலட்சம் அதிகமானதாயும் விளங்கியது. ஒவ்வொரு உற்பத்திக்குமான வருடாந்த அளவுகள், பெறுமதிகள் க. பெ. விலைகள் என்பவற்றிற்குமான மாற்றங்களின் விபரங்கள் அட்டவணை 11 (ஓ) 14இல் காணப்படுகின்றது.

அட்டவணை 11 (ஓ) 14இல் காட்டப்பட்டுள்ள மொத்த ஏற்றுமதிகளில் 45 சதவீதத்துக்கு வகைகூறிய தெங்கு உற்பத்திகள் 1971ம் ஆண்டோடு ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்திருந்தன. எனினும், சிலிர்த்தும்பு, மெத்தைத்தும்பு என்பவற்றிற்கான க. ஏ. பெ. விலைகள் அண்மையாண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் உயர்வடைந்து காணப்பட்டன. இதேவேளையில் இந்தப் பிரிவினைச் சேர்ந்த முக்கியத்துவம் அற்ற சிரட்டைக் கரியின் விலை கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது, இவ்வாறாக தெங்கின் உப-உற்பத்திகள் எல்லா ஏற்றுமதி வருவாய்களிலும் 1972இல் ரூ. 635 இலட்சமாக 1971ஆம் ஆண்டின் ரூ. 651 இலட்சத்திலிருந்து வீழ்ச்சியடைந்தது. ஆனால், 1970ஆம் ஆண்டினைவிட இது உயர்வானதாகும். 1972ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தெங்கு உற்பத்தியிலும் அதன் அளவிலும் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தபோதும் முன்னைய ஆண்டோடு தொடர்புபடுத்திப் பார்க்கையில் ஏற்றுமதி செய்யப்பட்ட தெங்கின் உப-உற்பத்திகளின் அளவு குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியடைந்தது. இது அளவில் பெரிய உற்பத்திகளாகிய தெங்கின் உப உற்பத்திகளை கப்பலேற்றுவதற்கு போதிய மேலதிக வசதிகள் இன்மையாலெனக் கருதலாம்.

வாசனைத் திரவியப் பிரிவில் பெருமளவு கறுவாப்பட்டைகள் 1971 ஆம் ஆண்டினைவிட சிறிதளவு குறைந்த விலையில் ஏற்றுமதி செய்யப்பட்டன. எனினும், இவ்வுற்பத்தியில் இருந்து பெறப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் 1965-70 வரையிலான ஆண்டுப் பகுதியில் எந்த ஆண்டிலும் பெற்ற வருவாய்களைவிடக் குறைவாகவே விளங்கிற்று. 1972ஆம் ஆண்டில் கறுவாத்துண்டுகள் ஏற்றுமதி அளவில்கூட குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்புக் காணப்பட்டது, 1969ஆம் ஆண்டு தொட்டுக் கிடைத்த ஆகக்கூடிய க. ஏ. பெ. விலையாகவும் ஏற்றுமதி அளவாகவும் இது விளங்கியது. ஏலக்காயின் க. ஏ. பெ. விலைகள் உலகச்சந்தை நிலைமைகளைப் பிரதிபலிப்பதாக 1967 ஆம் ஆண்டுதொட்டுப் பெறப்பட்ட ஆகக்குறைந்த விலையாகக் காணப்பட்டது. இது பெருமளவு ஏற்றுமதி செய்யப்பட்டபோதும், ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 57 இலட்சமாக மட்டும் அமைந்து, 1971ஆம் ஆண்டினைவிட சிறிதளவிலேயே குறைந்து காணப்பட்டது. 1971ஆம் ஆண்டு போலவே மிளகு ஏற்றுமதி மிகவும் சிறிதளவாகவே இருக்

தது. ஏனெனில், உள்ளூர் சந்தையில் இது மிளகாய்க்குப் பதிலீடாக பாவிக்கப்பட்டமையேயாகும். மிளகாயின் உயர்ந்த விலை மிளகு ஏற்றுமதியினை கவர்ச்சியற்றதாக்கியது. கராம்பு தொடர்ந்தும் இந்தியாவிற்கு[1] பெருமளவில் கடத்தப்பட்டது. இதனால் முறைப்படி ஏற்றுமதி செய்வது இலாபமற்றதாக்கப்பட்டது.[2]

1972 இல் ஏற்றுமதி செய்யப்பட்ட ஏனைய விவசாய உற்பத்திகளின் அளவில் மாற்றம் ஏற்படவில்லை. கொக்கோவின் க. ஏ. பெ. விலையும் ஏற்றுமதி வருவாயும் உலகச் சந்தையின் போக்கினைப் பிரதிபலித்ததுடன் முறையே 1966, 1967 ஆண்டுகள் தொட்டு மிகவும் குறைந்ததாகவும் விளங்கின. உற்பத்தி செய்யப்படாத புகையிலையின் க. ஏ. பெ. விலை, ஏற்றுமதி அளவு பெறுமதிகள் யாவும் 1971 ஆம் ஆண்டின் அளவாகவே விளங்கின.

கனிப்பொருள் பிரிவில் கடந்த பல ஆண்டுகளாகிய ஏற்றுமதி செய்யப்பட்டவற்றில் ஏற்றுமதி செய்யப்பட்ட காரீயத்தின் அளவுதான் குறைந்ததாக இருந்த போதும், அதன் க. ஏ. பெ. ஏற்றுமதி விலையில் ஏற்பட்ட பெருமளவிலான அதிகரிப்பின் காரணத்தால் 1971 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருவாய்களைவிட ரூ. 2 இலட்சத்தால் மட்டுமே வீழ்ச்சியுற்றுள்ளது. அடுத்து இல்மனைட் ஏற்றுமதி க. ஏ. பெ. விலை, அளவுகள், பெறுமதிகள் என்னும் எல்லா நியதிகளிலும் மிக உயர்ந்த எண்தொகைகளைப் பதிவுசெய்தது.

எந்த ஒருவகை ஏற்றுமதியிலும் பதிவு செய்யப்படாத அளவு உயர்ந்த விகித வருவாய் விரிவாக்கம் (238 சததவீதத்தால்) விலை உயர்ந்த இரத்தினகற்கள், நகைகள்என்பவற்றைப் பொறுத்தவரையில் பதிவுசெய்யப்பட்டது. இதற்குரிய பிரதான காரணம் விலையுயர்ந்த இரத்தினக் கற்களின் ஏற்றுமதி வருவாய்கள் 1971ஆம் ஆண்டின் ரூ. 34 இலட்சத்திலிருந்து ரூ. 123 இலட்சமாக அதிகரித்தமையேயாகும். உண்மையாக ரூ. 123 இலட்சம்கொண்ட இத்தொகையே சுங்கத்திணைக்களத்தினால்[3] குறைப்பதிவு செய்யப்பட்ட எண்தொகையாகும். இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறப்பட்டு, வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பதிவேடுகளோடு சரிபார்த்தபின் கிடைத்த தொகை ரூ. 159 இலட்சமாகும். இந்த ஏற்றுமதி வருவாய் விரிவாக்கத்துக்கு 11 யூலை 1972 இல் ஏற்றுமதியாளருக்கு வழங்கப்பட்ட இரத்தினக்கற்கள், ஏற்றுமதிமூலம் கிடைக்கும் தேறிய க. ஏ. பெ. ஏற்றுமதி வருவாய்களில் 25 சதவீதத்தினை கிடைத்தற்கரிய ''போகப்'' பொருட்களையும் ஏனைய பொருட்களையும் இறக்குமதி செய்யவும் வெளிநாட்டுப் பிரயாணத்திற்குப் பாவிக்கலாமெனவும் வழங்கப்பட்ட தூண்டுகோலே காரணமாகும். தனியார் துறையாலும், இரத்தினக்கற்

---

1. அரசாங்க முகவர் யாழ்ப்பாணம்
2. 1972ல் ஏற்றுமதி செய்யப்பட்டது முழுவதும் கராம்புத் தண்டுகளேயாகும்.
3. இவ்விடயம் தொடர்பான கலந்துரையாடலை முன்னே குறிக்கப்பட்ட 251ஆம்பக்கத்தில் பார்க்கவும்.

## ஏனைய வேளாண்மைப் பொருட்களினதும் கைத்தொழி

| | தொகை கூறு | அளவு | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 | 1964 | 19 |
| **தெங்கு உப உற்பத்தியின் தொகுதி** | | | | | | | | | | | | |
| தும்பு நார்–சிலிர்ப்பு ... | ஆயி. அந். | 553.9 | 440.7 | 401.2 | 538.0 | 563.9 | 506.7 | 474.0 | 534.1 | 506.5 | 30.6 | 23 |
| தும்பு நார்–மெத்தை ... | ,, | 1444.7 | 1280.6 | 1114.2 | 1065.0 | 1260.0 | 1180.3 | 1172.6 | 1307.2 | 1265.8 | 26.3 | 26 |
| சிரட்டைக் கரி ... | ,, | 256.9 | 298.7 | 264.6 | 273.0 | 319.1 | 385.2 | 583.4 | 629.9 | 539.2 | 2.4 | 2 |
| **வாசனைச் சரக்குகளின் தொகுதி** | | | | | | | | | | | | |
| கறுவாப்பட்டை ... | ,, | 50.7 | 47.4 | 47.1 | 52.8 | 61.8 | 65.9 | 70.0 | 72.6 | 77.0 | 24.6 | 27 |
| கறுவாத்தூள் ... | ,, | 6.1 | 7.4 | 7.2 | 7.9 | 16.6 | 21.6 | 12.7 | 15.3 | 21.5 | 0.8 | 1 |
| ஏலக்காய் ... | ,, | 2.8 | 2.8 | 2.5 | 2.4 | 2.5 | 3.2 | 4.0 | 3.7 | 4.2 | 2.3 | 4 |
| மிளகு ... | ,, | 11.0 | 13.7 | 6.0 | 2.0 | 16.2 | 17.9 | 16.9 | 0.9 | 2.1 | 1.6 | 2 |
| கராம்பு ... | ,, | 0.6 | 0.7 | 1.0 | 0·8 | 1.0 | 4.6 | 5.5 | 0.2 | 2.1 | 0.1 | 0 |
| **ஏனைய வேளாண்மைப் பொருட்கள்** | | | | | | | | | | | | |
| கொக்கோ விதைகள் ... | ,, | 38.3 | 28.3 | 42.5 | 23.2 | 34.8 | 25.4 | 29.9 | 30.1 | 30.7 | 6.3 | 4 |
| தயாரிக்கப்படாத புகையிலை | ப. இ. இரு. | 0.9 | — | — | 0.9 | 1.3 | 0.7 | 0.5 | 1.5 | 1.5 | ... | – |
| **கனிவளங்களின் தொகுதி** | ஆயி. அந். | | | | | | | | | | | |
| இயற்கையான காரீயம் ... | | 213.5 | 174.8 | 197.3 | 204.9 | 212.6 | 224.8 | 192.6 | 152.6 | 118.1 | 6.7 | 5 |
| இல்மனைட்டு ... | ,, | 739.6 | 1191.8 | 811.0 | 1764.4 | 1455.0 | 1667.2 | 1556.2 | 1731.1 | 1792.3 | 0.9 | 1 |
| **தயாரிக்கப்பட்ட உற்பத்திகளின் தொகுதி** | | | | | | | | | | | | |
| விலையுயர்ந்ததும், ஓரளவு விலையுயர்ந்ததுமான இரத்தினக் கற்கள் ... | ஆயி. கரெட். | — | 71.3 | 61.1 | 24.9 | 196.0 | 136.6 | 184.9 | வி. கி. | 288.2 | 1.3 | 4 |
| நகைகளும், நகைப் பொருட்களும் ... | ,, | — | — | — | — | — | — | — | — | — | 7.2 | 1 |
| மேலேயுள்ள விடயங்களின் மொத்தப்பெறுமானம் ... | | | | | | | | | | | 111.1 | 105 |

## சார்பற்ற பண்டங்களினதும் ஏற்றுமதி

| பெறுமதி (ப. இ. ரூ.) | | | | | | | க. எ. பெ. விலை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1966 | 1967 | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 |
| 17.4 | 22.0 | 25.6 | 24.6 | 22.3 | 27.2 | 28.6 | 57.31 | 52.74 | 43.49 | 40.94 | 43.35 | 48.63 | 47.13 | 51.01 | 56.41 |
